

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கீரனூர் மூகாம்பிகை பொறியியல் கல்லூரி மைதானத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் அரசு விழா தொடர்பான பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 04.11.2025 அன்று ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் ப.கோகுல்சிங், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் நாகவேல், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த உதவி மையம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஈடுபடும் கழகத்தினருக்கு எழும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உதவிடும் வகையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகம் மூலம் ஒருங்கிணைத்திட **கழக சட்டத்துறைச் செயலாளர்** மூத்த வழக்கறிஞர் **என். ஆர். இளங்கோ எம்.பி.**, மேற்பார்வையில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கழக நிர்வாகிகள் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சந்தேகங்களை **08065420020** என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கான பதில்களை பெற்று முறையாக பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| மண்டலம் | பெயர் | தொடர்பு எண் |
|---|---|---|
| தெற்கு | வழக்கறிஞர் கே.எஸ்,ரவிச்சந்திரன் | 98400 22252 |
| வடக்கு | வழக்கறிஞர் ஜெ.பச்சையப்பன் | 98402 60178 |
| மதுரை | வழக்கறிஞர் பாலாஜி | 97105 82658 |
| சென்னை | வழக்கறிஞர் நந்தகோபால் | 98841 53737 |
| டெல்டா | வழக்கறிஞர் பெ.ரகு | 94444 13889 |
| விழுப்புரம் | வழக்கறிஞர் சந்திரபோஸ் | 98413 64135 |
| கிருஷ்ணகிரி | வழக்கறிஞர் என்.மருது கணேஷ் | 98400 34950 |
| மேற்கு | வழக்கறிஞர் சசிதரன் | 99520 84065 |

**ஒருங்கிணைப்பு பணிக்கு உதவிட :**

**அழகிரி சதாசிவம்**, **(9841950707)**

(மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்)

**வே. கௌதமன்**, **(9040923535)**

(மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 04.11.2025.

**தலைமைக் கழகம்**,
தி.மு.க.

# தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகிற 09-11-2025 ஞாயிற்றுக்கிழமை, காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் மற்றும் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் ஆகிய மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள், கழக ஆக்கப் பணிகள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 04.11.2025

**ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# திருவள்ளூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

*திருவள்ளூர், நவ. 6-*

*முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி வட்டம், பொன்னேரி வட்டம், பூவிருந்தவல்லி வட்டம் ஆகிய பகுதிகளில் 03.11.2025 அன்று நீரில் முழ்கி உயிர் இழந்த 6 நபர்களின் 5 வாரிசுதாரர்களுக்கு ரூ.18 இலட்சத்திற்கான காசோலைகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்.*

*முன்னதாக, கும்மிடிபூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 31.10.2025 அன்று எண்ணூரர் கடற்கரை பகுதியில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட கும்மிடிபூண்டி வட்டத்தை சேர்ந்த திருமதி. தேவகி(30) த/பெ செல்வம் கும்மிடிபூண்டி இலங்கை அகதிகள் மறுவாழ்வு முகாம் பொத்திக்குப்பம், செல்வி. காயத்திரி(18)த/பெ மாதவன் தேர்வழி, செல்வி, ஷாலினி(18) த/பெ ஜம்புலிங்கம் பெரியஓபுளாபுரம், பொன்னேரி வட்டத்தை சேர்ந்த திருமதி. பாவனி(19) க/பெ செல்வகுமார், கோளூர் தேவம்பட்டு பகுதிகளை சேர்ந்த 4 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சம் வீதம் மொத்தம் ரூ,12 இலட்சம் மதிப்பிலான நிதி உதவிகளுக்கான காசோலைகள்*

*அதனைத்தொடர்ந்து திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் கடந்த 1.11.2025 அன்று பூவிருந்தவல்லி வட்டம் அயனம்பாக்கம் பகுதியை சேர்ந்த தமீம்அன்சாரி (எ) தமிழரசுவ சந்தா தம்பதியினரின் 2 குழந்தைகள் செல்வன்.ரியாஸ் (5) மற்றும் செல்வன்.ரிஸ்வான்(3) ஆகியோர் நீரில் முழ்கி உயிரிழந்ததால் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சம் வீதம் மொத்தம் ரூ,6 இலட்சம் மதிப்பிலான நிதி உதவிக்கான காசோலைகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கி ஆறுதல் கூறினார் .*

*அதனைத்தொடர்ந்து, கும்மிடிபூண்டி இலங்கை அகதிகள் மறுவாழ்வு முகாம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் 198 வீடுகளின் கட்டுமான பணிகள், சாலை வசதிகள், மழைநீர் வடிகால்வாய்கள் உள்ளிட்ட அமைச்சர் சா.மு.நாசர் நேரில் பார்வையிட்டு பின் செய்தியாளர்களிடம் கூறியதாவது,*

*தமிழக முதல்வர் அவர்கள் நம் தொப்புள் கொடி உறவுகளாக இருக்கின்ற புலம் பெயர்ந்த இலங்கை தமிழருடைய வாழ்வாதாரத்தை உயர்த்தப்பட வேண்டும் என்பதற்கிணங்க, தமிழகம் முழுவதும் இருக்கின்ற 103 முகாம்களில் இருக்கும் 19660 குடும்பங்கள் அந்த குடும்ப ங்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் ஒட்டு மொத்தமாக 10469 வீடுகள் கட்டப்படும் என தனது விதி எண்110 அறிக்கையில் அறிவிக்கப்பட்டன.*



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி என்ற முன்னெடுப்பின் ஒரு பகுதியாக திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகம் முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்டச் செயற்குழு கூட்டம் மாவட்டச் செயலாளர் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில நடைபெற்றது. இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், தொகுதி பார்வையாளர்கள் ப.ராமுக் குட்டி (ஏ) ராமமூர்த்தி, மகாலிங்கம் உள்பட ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.


## அமைச்சர் எ.வ.வேலு தலைமை! ஒருங்கிணைந்த

# சேலம் மாவட்ட தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் – எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. – டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!







சேலம், நவ.6-

சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன், கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மாவட்டத்தில் உள்ள பதினோறு சட்டமன்றத் தொகுதிகளில் தலைமைக் கழகத்தால் முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் அறிவிக்கப்பட்டுள்ள BLA2 பாக முகவர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தொகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்கிற ஆலோசனைக் கூட்டம் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எ.வ.வேலு அவர்கள் தலைமையில் சேலம் உளுந்தூர்பேட்டை தேசிய நெடுஞ்சாலையில் சீலநாயக்கன்பட்டி அருகில் அமைந்துள்ள மதன்லால் மைதானத்தில் 10.11.2025 ஆம் நாள் திங்கட்கிழமை காலை சரியாக 09.30 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, வீரபாண்டி, சேலம் தெற்கு, சேலம் வடக்கு, சேலம் மேற்கு, ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், BLA2 பாக முகவர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தொகுதி வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் குறித்த நேரத்தில் அவசியம் கலந்து கொள்ள வேண்டுமென 3கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: வாக்காளர்பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு குறித்து.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# திருப்பூர் கிழக்கு - திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராக பணியாற்றி வந்த மு.பெ.சாமிநாதன் அவர்கள் துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக திரு. **இல.பத்மநாபன்** (நெ. 4/666, சைட் எண். 103, கிருஷ்ணா நகர், விவேகானந்தா வித்யாலயா பள்ளி எதிரில், தாராபுரம் சாலை, கோவில் வழி, திருப்பூர் 641608 ) அவர்கள் **திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த திரு. இல.பத்மநாபன் அவர்கள், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக, திரு. **கே.ஈஸ்வரசாமி,** எம்.பி., (நெ. 1428ஏ, கருப்புசாமி புதூர், மைவாடி அஞ்சல், மடத்துக்குளம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.) அவர்கள் **திருப்பூர்தெற்குமாவட்டக்கழகப்பொறுப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018.
நாள்: 04.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் பங்குபெற்ற, 50க்கும் மேற்பட்ட கரூர் தொகுதி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கரூர் அரிக்காரம்பாளையத்தில் நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ. தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள், இரா.மாணிக்கம், ஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்துக்கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி (பூத்) பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் தொகுதி பார்வையாளர் மு.ஜெயக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சி.ஆர்.ராமச்சந்திரன் பா.அருண்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம், ஒன்றிய கழக செயலாளர்கள் சுரேந்தர், எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், காந்தி, பிரதீப், காரமடை நகர கழக செயலாளர் வெங்கடேஷ் உள்பட கழக நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர்கள், (பூத்) பாக பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 23 க்குட்பட்ட கோல்டு வின்ஸ் பூம்புகார் நகர் பகுதியில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ. 23.23 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடை கட்டிடம் கட்டும் பணியினை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், தலைமை பொறியாளர் விஜயகுமார், கிழக்கு மண்டலகுழுத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், உதவி செயற்பொறியாளர்கள் எழில், சத்தியமூர்த்தி கருப்பசாமி, மாமன்ற உறுப்பினர்கள் மணியன், பொன்னுசாமி, உதவி பொறியாளர் குமார் உள்பட கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.